# வடமராட்சிக் கிழக்கு நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வாய்மொழி வரலாற்றுக் கதைகளும் கலை வடிவங்களும்- ஓர் ஆய்வு

**கோகிலவாணி, க. , சிவரூபி,ச.**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
kokilavany03@gmail.com

*யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொன்மையான வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க பிரதேசங்களில் ஒன்றாக வடமராட்சி கிழக்குப் பிரதேசம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. தொன்மையான மக்கள் குடியேற்றங்கள், பண்பாடுகள் தோற்றம் பெற்ற இடங்களில் வடமராட்சி கிழக்குப் பிரதேசமும் ஒன்றாகும் என்பதனை வரலாற்று இலக்கியங்கள் மற்றும் தொல்லியல் சான்றுகள் என்பன உறுதிப்படுத்தி நிற்கின்றன. குறிப்பாக நாகர்கோவில், செம்பியன்பற்று, வெற்றிலைக்கேணி, குடாரப்பு, உடுத்துறை, முள்ளியான், மணற்காடு, குடத்தனை போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் எச்சங்கள் இப்பிரதேசத்தின் தொன்மையினை உறுதிப்படுத்தவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும் இப்பிரதேசத்தின் தொன்மையான பண்பாட்டுச் சிறப்பினை பிரதிபலிப்பதில் இங்குள்ள நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்திற்கு முக்கிய பங்குண்டு. எனினும் இவ்ஆலயத்தின் பூர்வீக வரலாறானது முறையான வகையில் ஆவணப்படுத்தப்படாது புகைபடர்ந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் தொன்மை பற்றிய குறிப்புக்கள் கையேடுகள், மலர்களாக வெளிவந்த போதிலும் முறையான ஆவணப்படுத்தல் ஊடாக இவ்வாலயத்தின் தொன்மைச் சிறப்பினை வெளிப்படுத்த வேண்டும் என்பது அவசியமாகின்றது. குறிப்பாக நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தின் தொன்மைச் சிறப்பினை வெளிப்படுத்துவதன் ஊடாக வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் தொன்மையான வரலாற்றையும், பண்பாட்டம்சங்களையும் அறிந்து கொள்ள முடியும். இந்தவகையில் இவ்வாய்வின் நோக்கங்களாக, வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் அமையப்பெற்ற நாகர்கோவில் எனும் தொன்மை மிகுந்த கிராமத்தினையும், அக்கிராமத்தில் அமைந்துள்ள பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தினதும் தொன்மைச் சிறப்பினையும் வெளிப்படுத்தலும், மற்றும் நாகதம்பிரான் ஆலயத்தின் தொன்மை மிகுந்த வரலாற்றுப் பாரம்பரியத்தையும், தனித்துவமான மரபுகளையும், தனக்கே உரிய பாரம்பரியமான திருவிழாக்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றமையால் அவற்றினை ஆவணப்படுத்தல் என்பன அமைகின்றன. இவ்வாய்வு நோக்கங்களினை நிறைவு செய்வதன் பொருட்டு ஆய்வுக்குரிய தரவுகள் களஆய்வு அடிப்படையிலான நேரடி அவதானிப்பின் ஊடாகவும், நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்களின் அடிப்படையிலும் சேகரிக்கப்பட்டன. அத்துடன் இவ்வாய்வுடன் தொடர்புபட்ட இலக்கியங்கள், நூல்கள், சஞ்சிகைகள் என்பனவற்றிலிருந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டு, களவாய்வு தரவுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. இந்தவகையில் ஒரு சமூகத்தின் மரபுகளே அந்தச் சமூகத்தின் அடையாளங்களாக விளங்குகின்றன. வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கிராமத்தினதும் நாகதம்பிரான் ஆலயத்தினதும் வழக்காறுகளும் மரபுகளும்*